நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை – 600 005.

சுற்றறிக்கை

சுற்றறிக்கை எண்.73339/99/எச்1 நாள்: 10/10/99.

பொருள்: ஓய்வூதியர்கள் சங்கம் – தமிழ்நாடு மாநகராட்சி மற்றும் நகராட்சி ஓய்வூதியர்கள் சங்கம் – கோரிக்கைகள் தொடர்பாக சில அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

பார்வை: தமிழ்நாடு மாநகராட்சி மற்றும் நகராட்சி ஓய்வூதியர்கள் சங்கம் கடிதம் நாள். 21/9/99.

பார்வையில் கண்ட கடிதத்தில் பணியிடையில் இறந்தவர்கள் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வழங்கப்படும் நியமனத்திற்கு முன்னுரிமை அளித்து உடனடியாக நியமனம் செய்யப்படவேண்டுமென்று கோரிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர பல்வேறு நகராட்சிகளில் உள்ள காலி பணியிடங்களில் விகிதாச்சார அடிப்படையில் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள் அரசாணை எண்.125 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்குதுறை நாள்: 27/5/99ன் படி தினக்கூலி பணியாளர்களிலிருந்துதான் நிரப்பப்படவேண்டும் என்று தெரிவித்து பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என்பதும் இவ்வலுவலகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட இனங்களில் கீழ் கண்டவாறு அறிவுரைகளை பின்பற்ற நகராட்சி ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1) கருணை அடிப்படை நியமனத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் பரிந்துரை செய்யப்படும் பெயர்களை உடனடியாக நியமனக்குழுவின் ஒப்புதலுக்கு வைத்து உரிய அனுமதி பெற்று நியமன உத்திரவுகளை தாமதமின்றி வழங்கவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. பல்வேறு நகராட்சிகளில் இவ்வாறு பரிந்துரை செய்யப்படும் நபர்களுக்கு உரிய நியமன உத்திரவு வழங்காமல் சில காரணங்களைக் குறிப்பிட்டு அவர்களின் பெயர்களை வேறு நகராட்சிகளுக்கு பரிந்துரை செய்யுமாறு பதில்கள் அனுப்பப்படுவது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

2) நகராட்சிகளில் ஏற்படும் காலி பணியிடங்களில் அரசாணை எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்: 27/5/99–ன் படி தினக்கூலி பணியாளர்களைக் கொண்டு நியமனம் செய்யவேண்டுமென அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்திரவில் விகிதாச்சார முறைப்படி பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்களை நிரப்பப்பட வேண்டாம் என அறிவுறுத்தப்படவில்லை. வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெற்று நிரப்பப்பட வேண்டிய பணி இடங்களையே தினக்கூலி பணியாளர்கள் மூலம் நிரப்பப்படவேண்டும். எனவே, விகிதாச்சாரப்படி பதவி உயர்வின் மூலம் நியமனம் செய்ய வேண்டிய பணியிடங்களில் உரிய விதிமுறைப்படி பதவி உயர்வு மூலம் நிரப்பப்படவேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/– க. கணேசன்,
நகராட்சி நிர்வாக ஆணையர்

பெறுநர்:–
அனைத்து நகராட்சி ஆணையர்கள்,
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர்கள்

//உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர் 11.10.99

12.10.99